ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/47 - 2017 ජූනි මස 02 වැනි සිකුරාදා - 2017.06.02

*2021/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச.வ.பி. 6/77* (ii).

**1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம்**

*பிரிவு 3 இன் கீழான கட்டளை*

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், தவறுகளைத் தடுப்பதிலும் அத்தகைய தவறுகள் தொடர்பில் தண்டனைகளை விதிப்பதிலும் பொருத்தனையொன்று தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களைக் கைமாற்றிக்கொள்வதை ஆளுகின்ற இரு தரப்பு சட்டப்பொறி முறையொன்றைத் தாபிப்பதற்கெனவும், பொருத்தனையின் அரச திறத்தவர்களுக்கிடையில் ஒத்துழைப்பை விருத்திசெய்யக்கூடியவாறு நீதியின் வினைத்திறனை முன்னேற்றுவதற்கெனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் வெளிநாட்டு அரசொன்றான உக்ரைனுக்குமிடையே 2016, யூன் 25 ஆந் திகதி கீவ்வில் கைச்சாத்திடப்பட்டுள்ளபடியினாலும், பொருத்தனைக்கான திறத்தவர்கள், குற்ற வழக்குத் தொடருதலுக்கென அல்லது தண்டனைகளை நிறைவேற்றுவதற்கென தோதான அரச திறத்தவர்களின் ஆட்புல எல்லைகளினுள் கண்டுபிடிக்கப்படும் ஆட்களை வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் மேல் அத்துடன் பொருத்தனையின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவற்றுக்கிடையே மீள ஒப்படைப்பதற்கு பொறுப்பேற்கின்றனரெனவும் ; அத்துடன் அத்தகைய பொருத்தனையின் ஏற்பாடுகள் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இசைவாக உள்ளதெனவும் ; 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் பொருத்தனையில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய திரிபு, மட்டுப்பாடு அல்லது நிபந்தனைக்கு அமைவாக, அத்தகைய வெளிநாட்டு அரசு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டுமெனவும் இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2017, யூன் 01.*

*06-597*